தமிழ் வளர்ச்சி இயக்குநரின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: முனைவர் ந. அருள்
******

திருவள்ளுவராண்டு 2055 / குரோதி / புரட்டாசி–28

செயல்முறை ஆணை எண்.நி2/ 5284/ 2024 நாள்: 14.10.2024

பொருள்: பணியாளர் தொகுதி – தமிழ் வளர்ச்சித் துறை – 2024 – 2025ஆம் ஆண்டுகளுக்கு உதவியாளர் பதவி உயர்வுக்கான இளநிலை உதவியாளர், தட்டச்சர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டமை – தட்டச்சர்களுக்கு உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்கி ஆணை வெளியிடல் – தொடர்பாக.

பார்வை:
1. 24.09.2024 ஆம் நாளிட்டத் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் செயல்முறை ஆணை எண். நி2/ 5284/ 2024
2. 25.09.2024 ஆம் நாளிட்ட திருநெல்வேலி மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலக தட்டச்சர் திருமதி மோ. விஜயலட்சுமி அவர்களின் கடிதம்
3. 25.09.2024 ஆம் நாளிட்ட திருநெல்வேலி மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித எண். 898/2024
4. 14.10.2024 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் செயல்முறை ஆணை எண். நி2/ 5284/ 2024

******

ஆணை:

தமிழ் வளர்ச்சித் துறையில் ஒழிவாக உள்ள உதவியாளர் பணியிடங்களை நிறைவு செய்யும் பொருட்டு 2024 – 2025ஆம் ஆம் ஆண்டுகளுக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் இளநிலை உதவியாளர், தட்டச்சர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல்கள் பார்வையில் காணும் செயல்முறை ஆணைகள் வாயிலாக வெளியிடப்பட்டன. இப்பட்டியல்களின்படி தகுதியுடைய கீழ்க்காணும் இரண்டு தட்டச்சர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறையில் ஒழிவாக உள்ள உதவியாளர் பணியிடங்களில் ரூ. 20600 – 75900 (நிலை 10) எனும் சம்பள நிலையில் உதவியாளராகப் பதவி உயர்வு அளித்தும் அவர்களின் பெயருக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களில் பணியமர்த்தம் செய்தும் இதன்மூலம் ஆணையிடப் பெறுகிறது.

மேலும், திருநெல்வேலி மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத் தட்டச்சர் திருமதி மோ. விஜயலட்சுமி அவர்கள் தற்போது பதவி உயர்வு வேண்டாம் எனக் கடிதம் அளித்துள்ளார். அவரின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு அவருக்கு தமிழ்நாடு சார்நிலைப் பணி விதிகள் 47(2)இன்படி 25.09.2024 முதல் 24.09.2027 வரை மூன்று ஆண்டுகளுக்குப் பதவித் துறப்பு அனுமதித்து செய்ததை ஏற்று இதன் மூலம் ஆணையிடப்பெறுகிறது

| வ. எண் | பெயர் / பதவி | பணிபுரியும் அலுவலகம் | உதவியாளராகப் பணியமர்த்தம் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | திரு. சு.முத்துசாமி<br>தட்டச்சர் | தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை– 8 | தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம்,<br>நாகப்பட்டினம் மாவட்டம் |
| 2. | திரு. த. விஜய்<br>தட்டச்சர் | தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை–8 | தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம்,<br>இராமநாதபுரம் மாவட்டம் |

மேலே வரிசை எண். 1, 2, தட்டச்சர்கள் உதவியாளராகப் பணியேற்கும் பொருட்டு இவ்வியக்ககப் பணியிலிருந்து 14.10.2024 பிற்பகல் விடுவிக்கப் பெறுகின்றனர். மேற்கண்ட தட்டச்சர்கள் உதவியாளர்களாகப் பணியில் சேர்ந்த விவரத்தைத் தெரிவிக்குமாறும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவிக்கப் பெறுகிறது.

உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களின் சம்பள அறுதியீடு விருப்புரிமையை ஒரு மாத காலத்திற்குள் உரியவாறு பெற்று அனுப்பி வைக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவிக்கப் பெறுகின்றனர்.

மேலும், உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் தமது இருக்கை பொருண்மைகளுக்கான இயல்பான பணிகளுடன் தட்டச்சுப் பணிகளையும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பெறுகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

பெறுநர்
தொடர்புடையவர்கள் (உரிய வழியாக)

படி
1. தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்– திருநெல்வேலி
2. தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் நாகப்பட்டினம்/இராமநாதபுரம்
3. சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –8.
4. மாவட்டக் கருவூல அலுவலர்கள் – நாகப்பட்டினம்/இராமநாதபுரம்
5. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முக எழுத்தர்
6. வ.செ.1 இருக்கை
7. அறிவிப்புப் பலகை
8. தமிழ் வளர்ச்சி இயக்ககச் சுற்றுக்கு
9. நி 2 முதன்மை ஆணைத் தொகுப்பு
10. கோப்புக்கு